உ

கடவுள் துணை.

கலியுகச்சிந்து.

இஃது-சிதம்பரம்.

நடராஜசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

—0—

சக்கரவர்த்தி அண்டு கம்பெனியாரால்

சென்னை:

சக்கரவர்த்தி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1915.

நெ. 13. நம்புலையர் தெருவு—மதராஸ்.

கலியுகச்சிந்து.

—0—

நாதநாமக்கிரியை-பல்லவி.

காலத்தைப்பாராய் கலிகாலக்கொடுமையின்
கோலத்தைக் கேளாய்

அநுபல்லவி.

காலத்தின் கோலத்தை ஞாலத்தின்மேலோத
பாலொத்தமொழியாளே வேலொத்தவிழியாளே

சரணங்கள்.

அரிசிப்படிரெண்டு பணமாய்முழிக்குது
ஐயய்யோயேழைகள் புழுகாய்துடிக்குது
வரியெல்லாம்தலைக்குமேல் வாரண்டாய்திரியுது
வாங்கினகடனோதான் கோட்டுக்கிழுக்குது
புலம்புதேகுடிகள் ஆடிஆவணிகூட
பொளக்குதே வெய்யல்
நாட்டுப்புறங்களெல்லாம் ஓட்டம்பிடிக்குது
நஞ்சைபுஞ்சைகளெல்லாம் பஞ்சாய்பறக்குது
காடுமேடுகளெல்லாம் கட்டுதிட்டமாச்சு
காக்காய்குருவிகூட பிழைப்பதரிதாய்போச்சி (கால)
மழையோமழையோவென்று மானம்பார்க்கலாச்சி
மாடுஆடுகள்பேச்சி பில்லுக்கலையலாச்சி
தரையும்லொணந்துபோச்சி தண்ணீர்பன்னீராச்சி
தங்கத்தைவைத்தாலும் வட்டிகேழ்க்கலாச்சி
முறைகெட்டுபோச்சி-தாயார் தமக்கைபோல
பெண்தேடலாச்சி

கொண்டமனைவிபேச்சி கூழுக்கலையலாச்சி
கூத்தியார்பாதத்தைக் கார்த்துயிருக்கலாச்சி
சேர்ந்தப்படிப்பெல்லாம் சூத்துக்குமணையாச்சி
சொல்லுமிங்கிலீஷுக்கு நல்லபிழைப்பாச்சி (காலு)
காட்டில்மழையாச்சி கழனிவொணந்துபோச்சி
கலப்பைதாத்துக்கோலை யிரப்பில்சொருகலாச்சி
போட்டவிரைகளெல்லாம்பொரியாய்பொரிஞ்சிபோச்
பிள்ளைகுட்டிகளெல்லாங் கஞ்சிக்கலையலாச்சி [சி
மண்மாரியாச்சி-நாட்டுப்புரங்களெல்லாம்
மண்மாரியாச்சி

யிருந்தவிரைகளெல்லாம் யேனோவிரைத்தமென்று
யிரவும்பகலுமாக முரையிட்டிருக்கும்போது
எடுஎடுவாயிதா பிடிபிடி ஆளென்று
ஏழெட்டுபோராக வீட்டைவளைத்துகொண்டு
ஜப்திகளாச்சி-ஆடுமாடுகளெல்லாம்
யேல்மாய்போச்சி

வீட்டுவரிவந்து வாசக்காலை தூக்குது
வேபாரவரிவந்து சாமானைவளைக்குது
குப்பைவரிவந்து குடிசையைபிடுங்குது
கொளுத்தும்விளக்குவரி கழுத்தைப்பிடிக்குது
வேடிக்கையாச்சி-தட்டுமுட்டுகளெல்லாம்
வியாபாரமாச்சி

களிதின்றுபிழைக்கவும் கேவுறுமொரைக்குது
கம்புசோளங்கூட வம்புகள்செய்யுது

கூலிக்கிபோனாலும் லஞ்சங்கள்கேழ்க்குது
குடுத்தாலும்நாலானாள் இடித்துத்துரத்துது (கால)
சீமைசீட்டிக்கெல்லாம் சிரிப்பாய்சிரிச்சிபோச்சி
சமுசாரிதாசியும் வேஷம்ஒன்றாய்ப்போச்சி
பொருமையாய்பிழைத்தவர்பிழைப்புக்குயிழுப்பாச்சி
பொய்சாட்சிசொல்வோர்க்கு கைமேல்காசியாச்சி
கடைகெட்டுப்போச்சி-சருவகுலங்களும்
நடைதப்பிப்போச்சி

அந்தணர்குலத்துடன் ஆசாரம்போச்சுது
அவரவர்சாஸ்திரம் பரணைமேல்தூங்குது
பணமென்றால்பிணங்கூட வாய்கொஞ்சந்திரக்குது
பாசுபண்ணவிபேச்சி வேலைக்கிதொங்குது (கால)
தாயொப்பிவந்தாலும் சேயன்யிசையலாச்சி
தம்பித்தமயன்பெண்டை தெம்பாயிழுக்கலாச்சி
நாய்போலேவிலைமாதர் யெங்கும்பெருத்துப்போச்சி
நாயகன்ஒப்பியே கூட்டிப்பிழைக்கலாச்சி
சுணைகெட்டுபோச்சி பணமேபெருமையாச்சி
ஜாதிகள்போச்சி

பலத்தஉத்தியோகத்தை பார்க்கமனைவியாச்சி
படுத்துயிருக்கும்போது அடுத்துப்போகலாச்சி
கலங்கிவேசியரெல்லாங் கண்ணீர்சொரியலாச்சி
கட்டின்மனைவியை விட்டுப்பிழைக்கலாச்சி
வழிகெட்டுப்போச்சி தகப்பன்பிள்ளையுங்கூட
வழக்காடலாச்சி

பூமியில்பிழைப்பற்று காவியுடுத்தலாச்சி
பூர்ணமாய்கெஞ்சாதம் அடித்துமயங்கலாச்சி
சாமியென்றவருக்குப் பேர்கள்நிகளமாச்சி
சாம்பலைப்பூசவும் தெரியாதவர்க்குச்சீச்சி கால
கடுகடுத்துப்பெற்றத் தாயையுதைக்கலாச்சி
கட்டினமனைவிசொல் தட்டாதிருக்கலாச்சி
கொடுத்தகடன்கேட்டால் கோட்டைகாட்டலாச்சி
கொஞ்சம்யேமாந்தாக்கால் பஞ்சாயடிக்கலாச்சி
அஞ்சாமல்போச்சி பெரியோர்சிறியோரென்ற
அளவெல்லாம்போச்சி
அருத்தமுண்டைகள்பிள்ளை பெத்துவளர்க்கலாச்சி
அப்பனையேமாந்தாக்கால் தாயைப்புணரலாச்சி
திருட்டுபிள்ளைகள்பெற்று முறித்துயெறியலாச்சி
தெய்வத்தைநினைப்பவர் லட்சத்திலொன்றாச்சி
கட்டிகொடுக்குமுன்னே கள்ளக்குட்டிகளாச்சி
கட்டினமூன்றுநாள் பெத்துமுரிக்கலாச்சி
மட்டிமுண்டைகளாலே மானங்கெட்டுப்போச்சி
மாதாபிதாப்பேச்சு தலையைக்குனியலாச்சி
அதிகமாய்போச்சி குடிசெட்டிமுண்டைகள்
அணியணியாச்சியிப்போ
பெண்கள்வியாபாரம் செய்துபிழைக்கலாச்சி
புருஷன்வெருக்கக்கட்டி பின்திதிரியலாச்சி
சண்டைசாடிக்கெல்லாம் பணத்தையிரைக்கலாச்சி
சாமிக்குகொடுப்பவர் பூமியில்மருந்தாச்சு கால

பஞ்சாங்கம்படிப்பெல்லாம் பஞ்சாய்பரந்துபோச்சி
பரச்சிக்கும்பணந்தந்து சிறப்பாய்நடக்கலாச்சி
அஞ்சாமல்பரசோத்தில் அந்தணர்விழலாச்சி
அவர்கள்மனைவியெல்லாம் அழுதுபுலம்பலாச்சி
குலங்கெட்டுப்போச்சி அந்தணருமேலயே
குடிகெட்டுபோச்சி

துரைக்குபிறந்தவன்போல் டோபயசடைகளாச்சு
சோடுஞ்செருப்பும்போச்சி பூடுசுதூக்கலாச்சி
அடுப்பங்கரையில்கூட யிங்கிலீஷ்பேசலாச்சி
ஐயமார்குடிக்கவே அடிக்கொருகடையாச்சி கால
சீமைதுரைகளெல்லாம் காவியுடுத்தலாச்சி
சாதிதமிழரெல்லாம் சட்டைமாட்டலாச்சி
காலந்தலைகீழாச்சி கருப்புங்குடியாய்போச்சி
கண்டவிடங்களெல்லாம் பையில்யிரக்கலாச்சி
வேதங்கள்போச்சி கிறிஸ்தவர்கூச்சலே
வேடிக்கையாச்சி

கோவில்குளங்களெல்லாம் குட்டிசுவராய்போச்சி
குடியரதிகமாச்சி கடைகள்பெருத்துபோச்சி
கிருமதேவிகளெல்லாம் கடையாய்பரந்துபோச்சி
கண்டவிடத்தில்வாந்தி பேதியதிகமாச்சி
கலியுகநடத்தைக்கு கடவுளுஞ்சிரிக்குதே
காலத்துக்கேத்தாப்போல் மாரிகள்வருகுது
குளிருகாச்சலில்பாதி கூண்டோடேசாய்க்குது
குனிந்துயெழுந்தபேரை வாந்தியில்மடக்குது

பேதியில்பாதி யிப்படிமடிஞ்சியும்
துள்ளுதேககூவிஜயோ
யின்றைக்கிருந்தவர் நாளைக்கில்லையென்று
யார்க்குந்தெரியுமிந்த ஊர்க்குந்தெரியுமிது
யேனோகெருவங்கொண்டு வீணாகமடியுது
யெண்ணிப்பார்த்தாரதில் ஆயிரஞ்சாயுது கால
பணங்கையில்வருமென்று பொய்சாட்சிசொல்லாதே
பரிதேசியேழைமேல் புலிபோலத்துள்ளாதே
முழுவேஷம்போட்டுநீ மோசங்கள்செய்யாதே
மூச்சிவெளியேபோனால் சீச்சீபிணமாச்சே
கெருவங்கொள்ளாதே நிலையில்லாகழுதைநீ
கெட்டுப்போகாதே
ஊத்தஉடலைநம்பி ஓதிபோலேங்களாதே
ஊரைபகைத்துகொண்டு வேருடன்மாளாதே
காத்தைமலைத்துகொண்டு கருமங்கள்தேடாதே
கலியுகசிந்தைநீ பழுதாகசொல்லாதே கால

கும்மிப்பாட்டுகள்.

அண்ணனுக்குத்தம்பி துரோகஞ்செய்யுங்காலம்
அப்பனைப்பிள்ளை யுதைக்குங்காலம்
பண்ணினநன்றி மறக்குங்காலம் பழி
பாவத்துக்கஞ்சா கலிகாலம். 1
புருஷனைப்பெண்டீ ருதைக்குங்காலம்பெற்ற
பெண்ணைதகப்பன் பார்க்குங்காலம்

தருமநெறியை மறக்குங்காலம் கெட்ட
தறுதலைக்கேத்த கலிகாலம் 2
தங்கையை அண்ணன் பார்க்குங்காலம்
தாயைப்போலிந்து மடிந்தகாலம்
மங்கைக்குமஞ்ச ளரைக்குங்காலம் ஐயா
மானமில்லாத கலிகாலம். 3
கொண்டபுருஷனைத் திட்டுங்காலம் இவள்
கூலிகொடுத்து யழைக்குங்காலம்
முண்டைகள்பிள்ளை பெருகுங்காலம் ஐயா
மோசத்துக்கஞ்சா கலிகாலம். 4
கட்டினமாது அலையுங்காலம் யிவன்
காவியுடுத்தி திரியுங்காலம்
புட்டிபுட்டியாய்க் குடிக்குங்காலம் ஐயா
புளுகருக்கேத்த கலிகாலம். 5
பொய்யானபத்ர மெழுதுங்காலம் சாட்சி
பூட்டியேகோர்ட்டில் கெலிக்குங்காலம்
தெய்வப்பொருளைத் திருடுங்காலம் இது
தீவினைக்கஞ்சா கலிகாலம். 6
அருமையறியா முரட்டுக்காலம் இது
கர்ம்மியைப்போற்றுந் திருட்டுகாலம்
சிறுமணவூர்முனி சாமிசொல்வாக்கியம்
சோதித்துப்பார்கலி காலகுணம். 7

கலியுகச்சிந்து முற்றிற்று.